VICE CHANCELLOR TAMIL NADU OPEN UNIVERSITY
TAMIL NADU OPEN UNIVERSITY CHENNAI-15. 02 MAY 2017 REGISTRAR OFFICE

சுருக்கம்

உயர்கல்வித்துறை – தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் இரண்டு புதிய மண்டல மையங்களை விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நிறுவுவதற்கு நிருவாக அனுமதி அளித்தல் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணைகள்– வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (கே1)துறை

அரசாணை (நிலை) எண்.100

நாள் 26.04.2017
திருவள்ளுவராண்டு, 2048,
ஹேவிளம்பி, சித்திரை 13,
படிக்க:–

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின் கடிதம் கோ.எண்.360 /தமிழக அரசு–68/ந.எண்.4102/2016/391, நாள் 18.10.2016.

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன்கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 23.08.2016 அன்று கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

"தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் மண்டல மையங்கள் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்டு வரும் கல்விச் சேவையை மாணவர்கள் எளிதில் பெறும் பொருட்டும், நீண்ட தூரம் பயணம் செய்வதைத் தவிர்க்கவும், இரண்டு புதிய மண்டல மையங்கள் விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 12 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். "

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பதிவாளர், திறந்தநிலைப் பல்கலைக்கழகம் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அனுப்பிய கருத்துருவில் விழுப்புரத்தில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையத்தை சமுதாயக் கல்லூரியுடன் நிறுவினால் வேலைவாய்ப்புகள் வழங்கக் கூடிய திறன்மேம்பாட்டு, தொழிற்படிப்புகளை வழங்கி அப்பகுதி மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை மேம்படுத்த முடியும் என்றும், இப்பகுதி தொழில்பெருக்கம் நிறைந்த சென்னைக்கு மிக அருகில் இருப்பதால், வழக்கமான பட்டப் படிப்புகளுக்கு மாற்றாக தொழிற்படிப்புகளை வழங்கும்போது மாணவர்கள் எளிதில் வேலைவாய்ப்புகளைப் பெறுவார்கள் என்றும், தொலைதூரப் பகுதிகளிலும், எளிதில் சென்றடைய முடியாத, போக்குவரத்து வசதியில்லாத பகுதிகளை கொண்ட மலைவாழ் மக்கள் நிறைந்த மாவட்டம் நீலகிரி என்றும் இம்மாவட்டத்தின் எழுத்தறிவு விகிதம் 85.25 விழுக்காடு என்றும் இம்மாவட்டத்தில் பல பள்ளிகள் இருப்பதன் விளைவே இதற்கு காரணம் என்றும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையம் இங்கு அமைக்கப்பட்டால் சமுதாயக் கல்லூரிகள் மூலமாக தொழிற்பயிற்சிப் படிப்புகளையும் வழங்க முடியும் என்றும் விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இரண்டு புதிய மண்டல மையங்களை நிறுவுவதற்கு தொடர் செலவினம் ரூ.43,96,800/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.12,06,03,200/- தேவைப்படும் என தெரிவித்து, விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்கள் ரூ.12.50 கோடி செலவில் நிறுவுவதற்கு நிர்வாக அனுமதியும், மொத்த செலவினத் தொகையான ரூ.12.50 கோடியில் ரூ.6.25 கோடியை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும் மீதமுள்ள தொகையான ரூ.6.25 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும், உரிய ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பதிவாளர், திறந்தநிலைப் பல்கலைக்கழகம் அவர்களின் கருத்துருவை பரிசீலித்த அரசு பின்வருமாறு ஆணைகள் வெளியிடுகிறது:—

(i) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் இரண்டு புதிய மண்டல மையங்களை ரூ.12,50,00,000/— (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) செலவில் விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நிறுவுவதற்கு நிருவாக அனுமதி அளிக்கப்படுகிறது.

(ii) இம்மையங்களை நிறுவுவதற்கு தேவைப்படும் இவ்வரசாணையின் இணைப்பு—I-ல் குறிப்பிட்டுள்ள மொத்த தொடராச் செலவினம் ரூ.12,06,03,200/—இல், அரசின் பங்களிப்பாக (50 சதவீதம்) ரூ.6,03,01,600/— (ரூபாய் ஆறு கோடியே மூன்று இலட்சத்து ஓராயிரத்து அறுநூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) இவ்வரசாணையின் இணைப்பு—II—ல் குறிப்பிட்டுள்ள தொடர் செலவினம் ரூ.43,96,800/— (ரூபாய் நாற்பத்தி மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்) மற்றும் தொடராச் செலவினத்தில் மீதி தொகையான (50 சதவீதம்) ரூ.6,03,01,600/—(ரூபாய் ஆறு கோடியே மூன்று இலட்சத்து ஓராயிரத்து அறுநூறு மட்டும்) ஆக மொத்தம் ரூ. 6,46,98,400/—ஐ பல்கலைக்கழக நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3(ii) —ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:—

"2202— பொதுக்கல்வி —03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் — 102 பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி — மாநிலச் செலவினங்கள்— BM தமிழ்நாடு திறந்த வெளிப் பல்கலைக்கழகம், சென்னை—09 உதவித் தொகை — 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை"
(ததொகு 2202 03 102 BM 09 28)

5. மேலே பத்தி 3(ii)—ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதி (வ.செ.1) துறையில் தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய எதிர்பாராச் செலவு நிதி விதிகள் 1963ன்படி உரிய படிவத்தில் (படிவம் A) இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், இச்செலவினத்தை 2017–2018 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (கல்வி–I) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.20359/கல்வி1/2017, நாள் 24.04.2017–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 308 (முன்னூற்று எட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப்பல்கலைக்கழகம், சென்னை–15.
உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்,சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–25
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35
சம்மந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர்.

நகல்
மாண்புமிகு உயர்கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை முதன்மைச் செயலரின் தனிசெயலர்.
நிதி (கல்வி–I/ வ.செ.பொ–I / வ.செ.பொ–II)த்துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்பு செயலாளர்.

26/4/17

<u>இணைப்பு–I</u>

அரசாணை நிலை எண். 100, உயர்கல்வி(கே1)த்துறை, நாள் 26.04.2017

I) தொடராச் செலவினங்கள்

<u>விழுப்புரம் மண்டலம்</u>

| வ. எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) | 50% செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | அலுவலகம் | 5,00,00,000.00 | 2,50,00,000.00 |
| 2. | வகுப்பறைகள்<br>அ) மண்டல மையம்–4<br>ஆ) சமுதாயக் கல்லூரி –5 | | |
| 3. | ஆய்வக அறைகள் –2 | | |
| 4. | கூட்ட அறைகள் –2 | | |
| 5. | கணினி ஆய்வக அறைகள்–2 | | |
| 6. | தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் கூடிய சிறப்பு வகுப்பறை – 1 | | |
| 7. | நூலகம் –1 | | |
| 8. | பாடநூல்கள் இருப்பு அறைகள் –2 | | |
| 9. | கழிப்பறை (ஆண்கள் மற்றும் பெண்கள்) | | |
| 10. | வாகன நிறுத்துமிடம் | | |
| | மொத்தம் | 5,00,00,000.00 | 2,50,00,000.00 |

<u>நீலகிரி மண்டலம்</u>

| வ. எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) | 50% செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | அலுவலகம் | 5,00,00,000.00 | 2,50,00,000.00 |
| 2. | வகுப்பறைகள்<br>அ) மண்டல மையம்–4<br>ஆ) சமுதாயக் கல்லூரி –5 | | |
| 3. | ஆய்வக அறைகள் –2 | | |
| 4. | கூட்ட அறைகள் –2 | | |
| 5. | கணினி ஆய்வக அறைகள்–2 | | |
| 6. | தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் கூடிய சிறப்பு வகுப்பறை – 1 | | |
| 7. | நூலகம் –1 | | |
| 8. | பாடநூல்கள் இருப்பு அறைகள் –2 | | |
| 9. | கழிப்பறை (ஆண்கள் மற்றும் பெண்கள்) | | |
| 10. | வாகன நிறுத்துமிடம் | | |
| | மொத்தம் | 5,00,00,000.00 | 2,50,00,000.00 |

விழுப்புரம் மற்றும் நீலகிரி மண்டலம்

II) அறைகலன்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள்

| வ.எண். | இனங்கள் | செலவினம் (ரூபாயில்) | 50% செலவினம் |
|---|---|---|---|
| 1. | மேசைகள், நாற்காலிகள், இரும்பு அலமாரிகள், புத்தக அலமாரிகள் | 2,06,03,200.00 | 1,03,01,600.00 |
| 2. | கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், அச்சிடும் எந்திரங்கள் நகல் எடுக்கும் எந்திரங்கள், மின்னாக்கி | | |
| 3. | எல்.சி.டி. புராஜெக்டர், ஒலி மற்றும் ஒளி அமைப்பு, சிசி டிவி கேமிரா, நீர் சுத்திகரிப்பான் | | |
| 4. | மின் சாதனங்கள்<br>I) விளக்குகள்<br>II) மின் விசிறிகள்<br>III) குளிர்சாதனங்கள் | | |
| | மொத்தம் | 2,06,03,200.00 | 1,03,01,600.00 |
| | பெரு மொத்தம் | 12,06,03,200.00 | 6,03,01,600.00 |

## இணைப்பு–II

அரசாணை நிலை எண். 100, உயர்கல்வி(கே1)த்துறை, நாள் 26.04.2017

விழுப்புரம் மற்றும் நீலகிரி மண்டலம்

I) தொடர் செலவினம் ( பணியாளர் ஊதியம்)

| வ.எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | உதவிப்பேராசிரியர் மற்றும் மண்டல மைய ஒருங்கிணைப்பாளர் சம்பளம் (அடிப்படை சம்பளம் (15600-39100) + தர ஊதியம் (6000) + அகவிலைப் படி + நகர ஈட்டுப் படி + வீ.வா. படி + மருத்துவப் படி) ரூ.52600x2x12= ரூ.12,62,400/– | 12,62,400.00 |
| 2. | உதவிப்பேராசிரியர் மற்றும் சமுதாயக் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் சம்பளம் (அடிப்படை சம்பளம் (15600-39100) + தர ஊதியம் (6000) + அகவிலைப் படி + நகர ஈட்டுப் படி + வீ.வா. படி + மருத்துவப் படி) ரூ.52600x2x12= ரூ.12,62,400/– | 12,62,400.00 |
| 3. | உதவி நிரலாளர்<br>தொகுப்பூதியம் – ரூ.15,000/-<br>(ரூ.15000x2x12=ரூ.3,60,000/–) | 3,60,000.00 |
| 4. | தரவு உள்ளிடுபவர்<br>தொகுப்பூதியம் – ரூ.10,000/-<br>(ரூ.10000x2x12=ரூ 2,40,000/–) | 2,40,000.00 |
| 5. | அலுவலக உதவியாளர்<br>தொகுப்பூதியம் – ரூ.8000/-<br>(ரூ.8000x2x12=ரூ1,92,000) | 1,92,000.00 |
| | மொத்தம் | 33,16,800.00 |

II) பராமரிப்புச் செலவு

| வ. எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | வாடகை (10,000 ச.அ) (ரூ.35000x2x12) | 8,40,000.00 |
| 2. | நடைமுறை செலவினம் (தண்ணீர் மற்றும் மின்சாரம்) (ரூ.6000x2x12) | 1,44,000.00 |
| 3. | தரைவழித் தொலைபேசி–இணைய வசதியுடன் (ரூ.2000x2x12) | 48,000.00 |
| 4. | பயன்படு பொருள்கள் (டோனர், தாள், அஞ்சல் உறைகள், அஞ்சல் செலவுகள், குறுந் தகடுகள் பிற.,) (ரூ.2000x2x12) | 48,000.00 |
| | மொத்தம் | 10,80,000.00 |
| | பெரு மொத்தம் | 43,96,800.00 |

## III) தொடராச் செலவினங்கள்

### விழுப்புரம் மண்டலம்

| வ.எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | அலுவலகம் | 2,50,00,000.00 |
| 2. | வகுப்பறைகள்<br>அ) மண்டல மையம்–4<br>ஆ) சமுதாயக் கல்லூரி –5 | |
| 3. | ஆய்வக அறைகள் –2 | |
| 4. | கூட்ட அறைகள் –2 | |
| 5. | கணினி ஆய்வக அறைகள்–2 | |
| 6. | தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் கூடிய சிறப்பு வகுப்பறை – 1 | |
| 7. | நூலகம் –1 | |
| 8. | பாடநூல்கள் இருப்பு அறைகள் –2 | |
| 9. | கழிப்பறை (ஆண்கள் மற்றும் பெண்கள்) | |
| 10. | வாகன நிறுத்துமிடம் | |
| | மொத்தம் | 2,50,00,000.00 |

### நீலகிரி மண்டலம்

| வ.எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | அலுவலகம் | 2,50,00,000.00 |
| 2. | வகுப்பறைகள்<br>அ) மண்டல மையம்–4<br>ஆ) சமுதாயக் கல்லூரி –5 | |
| 3. | ஆய்வக அறைகள் –2 | |
| 4. | கூட்ட அறைகள் –2 | |
| 5. | கணினி ஆய்வக அறைகள்–2 | |
| 6. | தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் கூடிய சிறப்பு வகுப்பறை – 1 | |
| 7. | நூலகம் –1 | |
| 8. | பாடநூல்கள் இருப்பு அறைகள் –2 | |
| 9. | கழிப்பறை (ஆண்கள் மற்றும் பெண்கள்) | |
| 10. | வாகன நிறுத்துமிடம் | |
| | மொத்தம் | 2,50,00,000.00 |

**விழுப்புரம் மற்றும் நீலகிரி மண்டலம்**

**IV) அறைகலன்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள்**

| வ.எண். | இனங்கள் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மேசைகள், நாற்காலிகள், இரும்பு அலமாரிகள், புத்தக அலமாரிகள் | 1,03,01,600.00 |
| 2. | கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், அச்சிடும் எந்திரங்கள் நகல் எடுக்கும் எந்திரங்கள், மின்னாக்கி | |
| 3. | எல்.சி.டி. புராஜெக்டர், ஒலி மற்றும் ஒளி அமைப்பு, சிசி டிவி கேமிரா, நீர் சுத்திகரிப்பான் | |
| 4. | மின் சாதனங்கள்<br>I) விளக்குகள்<br>II) மின் விசிறிகள்<br>III) குளிர்சாதனங்கள் | |
| | **மொத்தம்** | **1,03,01,600.00** |
| | **பெரு மொத்தம்** | **6,03,01,600.00** |

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

அரசு சார்பு செயலாளர்.

26/4/17.